ISSN : 2456-821X.

புதிய அவையம்

Vol. 09, Issue – 02, December - 2025

கட்டுரை பெறப்பட்டது : November - 2025 கட்டுரை ஏற்கப்பட்டது : December – 2025

---

==========================================================

**அதிகாரம் தன்னைத்தானே கீழறுப்பு செய்துகொள்ளும் என்கிறது**

**கூகி வா தியாங்கோவின் 'விடைகொடு ஆப்பிரிக்கா' கதை**

==========================================================

**முனைவர் இரா. இராஜா**

**உதவிப் பேராசிரியர்**

**தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை**

**தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)**

**திருப்பத்தூர் – 635601.**

==============================================================

**முன்னுரை**

காலனித்துவத்திற்குப் பிந்தையக் காலக்கட்டக் காலனியக் கூறுகள் பின்னைக் காலனியம் ஆகும். காலனித்துவத்தின் புறக்கூறுகள் நாட்டைவிட்டு வெளியேறினாலும் அது விட்டுச் சென்ற அகக்கூறுகளை மனத்திலிருந்து வெளியேற்றுவது தனி ஒரு வேலைத்திட்டம். அதைத்தான் பின்காலனிய எழுத்துகள் செய்கின்றன. அப்படி ஒரு பின் காலனித்துவ எழுத்துகளைக் கொடுத்தவர்தான் 'மனத்திலிருந்து காலனித்துவத்தை நீக்குதல்' (Decolonising the Mind) என்ற பிரதிக்குச் சொந்தக்காரர் கென்ய எழுத்தாளர்

கூகி வா தியாங்கோ. அவர் எழுதியதுதான் ‘விடைகொடு ஆப்பிரிக்கா’ என்னும் கதை. விடைகொடு ஆப்பிரிக்கா கதை ஐரோப்பிய ஆங்கிலேய ஏகாதிப்ததிய அதிகாரத்திற்கு எதிரான கதை என்பது வாசிப்பில் எளிதில் அடையாளம் காணமுடியும். என்றாலும் அது கதையாடப்பட்ட விதத்தில்தான் அதன் சிறப்புத் தன்மை அடங்கியிருக்கிறது. நோபல் பரிசு குறித்த கேள்விக்கு தியாங்கோவின் பதில் : “நோபல் பரிசு எனக்கு ஒரு காலமும் கிடையாது. ஏனென்றால் சிலர் அதிகாரத்தில் உள்ளவர்களுக்குப் பிடித்த முறையில் காலனித்துவத்துக்கு எதிராக எழுதுவார்கள். நான் அப்படியாக எழுதுவதில்லை” (காலச்சுவடு, ஜுலை 2025, ப.32). விடைகொடு ஆப்பிரிக்கா கதை எழுதிய தியாங்கோ அதிகாரத்திற்கு எதிரானவர் என்றாலும் இங்குக் கதையாசிரியர் கருத்துநிலை அடிப்படையில் கதையை அதிகாரத்திற்கு எதிராக வாசிக்கப் போவதில்லை.

அதிகாரத்திற்கு எதிராக எழுதுதல் என்பது அதிகாரத்தை ஒடுக்குமுறைக்கு எதிராக நிறுத்தி எழுதுதல் அல்லது அதிகாரத்தைத் தூரப்படுத்தி எழுதுதல் அல்லது அதிகாரத்திற்குள் இருந்து அதிகாரத்தை அரிப்பது. இந்த அதிகாரத்தை அரிப்பது உள்ளார்ந்து அதாவது அதிகாரமாகிய தன்னிலைக்குள் நிகழ்வது. விடைகொடு ஆப்பிரிக்கா கதை அப்படியொரு கதை. இன்னும் சொல்லப்போனால் விடுதலையாகிய மற்றமை அதிகாரத்தின் தன்னிலைக்குள் நுழைந்து அதிகாரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உரையாடல்வழி மாற்றியமைப்பது. மற்றமையான விடுதலை ஆதிப்பண்பு கொண்டது. நிலத்தோடும் பண்பாட்டோடும் தொடர்புடையது. அதிகாரம் நிலம், பண்பாடு ஆகியவற்றின் மேற்பரப்போடு தொடர்புடையது. ஐரோப்பிய அதிகாரம் புறம் சார்ந்தது என்றால் ஆப்பிரிக்க விடுதலை அகம் சார்ந்தது. அப்படியானால் அதிகாரமும் அதற்கு எதிரான விடுதலையும் சமதள முரண் இல்லையா அல்லது சமதளத்தில் நிறுத்தி உரையாடுவதன் வழி அதிகாரத்திற்கு எதிரான விடுதலையைச் சாத்தியப்படுத்த முடியாதா என்ற கேள்வி எழுகிறது. (இக்கேள்விக்கு அடிப்படை கதை அதிகாரத்தையும் விடுதலையையும் நேரெதிராக நிறுத்தி கதையாடலை அமைக்காமையிலிருந்து உருவானது என்பது குறிப்பிடத்தக்கது.) இக்கேள்விக்குச் சாத்தியப்படுத்த முடியாது என்பதற்கு மாற்றாக மற்றொரு சாத்தியத்தைப் பரிசோதனை செய்து பார்க்கிறது கதை

என்னும் கருதுகோளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது. இவ்ஆய்வைத் தமிழின் அகப்புற வாசிப்பின்படி நிகழ்த்த முனைகிறது இக்கட்டுரை.

அதிகாரம் தன்னை உயர்ந்ததாகக் கற்பனை செய்துகொள்கிறது. அதன்மீது ஒரு கல் எறியப்பட்டால் அது தன்னை நிலைநிறுத்திக்கொள்ளப் போராடும். அப்படித்தான் ஆப்பிரிக்காவிற்கு நாகரிகத்தைக் கற்றுத்தரும் ஏகாதிபத்திய மனோபாவமும் சமையலறையை அறியாத ஆணாதிக்க மனோபாவமும் தொழில் முன்னேற்றத்தை விரும்பும் முதலாளித்துவ மனோபாவமும் கொண்ட ஐரோப்பிய அதிகாரியின்/த்தின் மீது அவன் வீட்டில் அடிமையாக வேலை செய்த ஆப்பிரிக்க அடிமை மாவ் மாவ் இயக்கத்தின் தொடர்பால் ஏளனச் சிரிப்பையும் அகங்காரப் பார்வையும் கொண்டு கல் எறிகிறான். அந்தக் கல் எறிந்த முகம் கனவாகவும் நினைவாகவும் வந்து அதிகாரியைத் தொந்தரவு செய்கிறது. அதிகாரியின் அதிகாரம் அதை வெளியேற்ற முனைவதால் உள் உரையாடல் பரிணமிக்கிறது.

அதிகாரியின் மனைவி சமையலறையை உலகமாகக் கொண்டு வாழ்பவள். கணவனுடன் சேர்ந்து ஆப்பிரிக்க மக்களுக்கு நாகரிகம் கற்றுத்தர விரும்பி அவர்களுடன் பழகிய சூழலில் உருவான அகத் தேடலும் கணவன் தொழில் தொழில் என்று தனது உணர்வுக்கு மதிப்பளிக்காமல் நடந்துகொண்ட புறச்சூழலும் இணைந்து சுய விடுதலையை நோக்கி அதிகாரியின் மனைவியை நகர வைக்கிறது. அவள் தனது வீட்டில் வேலைசெய்த பணியாள் சிறுவனான அடிமையுடன் உடலுறவு கொண்டு சுதந்திரத்தை உணர்கிறாள். இங்குப் பாலியல் உறவு சுதந்திரத்தைக் கொடுக்கிறது. அப்படியானால் இங்குதான் பணியாள் சிறுவனான அடிமையும் மாவ் மாவ் இயக்கத்தில் சேர்வதற்கான சுதந்திரத்தைப் பெறுகிறான் என்பதாக உய்த்துணரலாம். பாலியல் உறவு விடுதலையைத் தருகிறது என்றால் விடுதலை அகம் சார்ந்தது என்பது தெளிவாகிறது. அதிகாரம் கையளிக்கப்படுவது என்பது புறநிலை. அது விருப்பத்தின் அடிப்படையில் அமைய சாத்தியமில்லை. விடுதலை கையளிக்கப்படுவது என்பது அகநிலை. அது விருப்பமில்லாமல் முழுமையடையாது.

இந்தச் சூழ்நிலையில்தான் ஆப்பிரிக்கப் பணியாள் சிறுவன் ஐரோப்பிய அதிகாரியின் வீட்டைவிட்டு வெளியேறும்போது அதிகாரியின் மனைவி

வருத்தப்படுகிறாள். அவளது வருத்தம் அதிகாரியின் அதிகாரத்திற்குக் கோபமாக மாறுகிறது. மேலும் அதிகாரி மாவட்ட அளவிலான பதவியிலிருந்து மேல்நோக்கிச் செல்லாமல் இருப்பது, தொழிலில் முன்னேற்றமடையாமல் இருப்பது ஆகியவை ஆணாதிக்க, அதிகார, முதலாளித்துவ மனத்தில் குற்ற உணர்ச்சியை உருவாக்குகிறது. குற்ற உணர்ச்சி மனைவி தன்னைப் பார்த்து நகைப்பதான புறக்கூறைக் கற்பனை செய்துகொண்டு வளர்கிறது. இங்கு ஏகாதிபத்திய, முதலாளித்துவ அதிகாரத்திற்கு எதிரான அடிமையின் ஏளனச் சிரிப்பும் வன்முறையான பார்வையும் ஆணாதிக்கத்திற்கு எதிரான மனைவியின் சிரிப்பும் (அவன் நினைத்துக்கொள்வது) இணைந்து அதிகாரத்துடன் உள்முகமாக உரையாடுகிறது. மேற்சொன்ன உள்உரையாடல் இவ்விதம் வளர்கிறது.

என்னதான் அதிகாரத்திற்கு எதிரான உரையாடல் உள்ளிருந்து (அகம்) அவனைத் தொந்தரவு செய்தாலும் ஆதிக்கம் கொண்ட அதிகாரம் வெளியிலிருந்து (புறம்) அவனைக் காப்பாற்றிக்கொண்டே வருகிறது. அவற்றை கரடு முரடாக வண்டி ஓட்டியும் உயிர்ப் பிழைத்தல், காட்டிற்குள் அச்சம் தோன்றினாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் இருத்தல், அடிமையின் பார்வை அச்சத்தைக் கொடுத்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் கடும் நடவடிக்கை எடுத்தல், அடிமையின் தொந்தரவு மனநிலையிலிருந்து விடுபட முயலுதல், தன் மனைவியிடம் தன்னை நிரூபிக்க முயலுதல்... முதலான காட்சிகள் உணர்த்துகின்றன. அதிகாரி தனது மனத் தொந்தரவுக்கான காரணத்தினை அதிகாரத்தின் துணையோடு அலசுகிறார். தொடக்ககால ஐரோப்பிய குடியேறிகள் தனது சாபத்தை நீக்கிக்கொள்ள ஆப்பிரிக்க மந்திரவாதிகளை நாடும்போது, அதிகாரிக்கு மட்டும் ஐரோப்பிய நம்பிக்கையான தீங்கைத் தரும் ஒன்றின் உருவத்தை மெழுகால் உருவாக்கி அவற்றின் கண்களை ஊசியால் குத்துவதாகிய தண்டனை மந்திரம் நினைவு வருகிறது. அவற்றை பகுத்தறிவு ஏற்காத காரணத்தினால் அவனது அதிகார மனம் எழுத்தைத் தெரிவு செய்கிறது. கதையின்படி எழுத்து ஆண் தன்மை கொண்டது என்பதை விளக்கத் தேவையில்லை.

அடிமை யார்? அவனது ஆவியிடமிருந்து நான் எப்படி விடுதலைப் பெற்றேன் என்ற எழுத்தை மனைவியிடம் கொடுத்துத் தனது அதிகாரத்தை நிலைநிறுத்திய பிறகே

ஆப்பிரிக்காவை விட்டு வெளியேறுவது என்று அதிகாரி நினைக்கிறான். தனது காதலைத் தனது கணவனிடம் வெளிப்படுத்தி மன்னிப்புக் கேட்டுக் கணவனுடன் பாலியல் உறவு கொண்ட பிறகு ஆப்பிரிக்காவை விட்டு வெளியேறுதல் என்று அதிகாரியின் மனைவி நினைக்கிறாள். இவர்களது நினைப்பு ஆப்பிரிக்காவை விட்டு வெளியேறும் முந்தைய நாள் இரவில் சந்தித்துக் கொள்கின்றன. அந்த அடிமைதான் தனது மனைவியின் காதலி என்பதைத் தெரிந்தவுடன் சமையலறைக்குள்ளே செல்லாத அதிகாரி சமையலறைக்குள் சென்று கடிதத்தைத் தீயிட்டுக் கொளுத்துகிறான். கடிதம் அவனது அதிகாரம். அந்த அதிகாரத்தை அவள் படித்திருந்தால் அதிகாரியின் அதிகாரம் தொடர்ந்திருக்கும். அவ்வாறு இல்லாது அதிகாரம் தன்னைக் கீழறுப்பு செய்துகொள்வதன்வழி குற்ற உணர்ச்சி தொடர்கிறது. அதைத்தான் "அந்தப் பணியாள் சிறுவனின் ஆவி, வாழ்நாள் முழுவதும் தன்னைத் துரத்தும் என்பதை அவர் இப்போது அறிந்துகொண்டார். அவர் மனசில் கடைசியாக ஒரே ஒரு வார்த்தை தோன்றியது. ஆப்பிரிக்கா" (காலச்சுவடு, ஜூலை 2025 :39) என நினைவில் தோன்றுவதாகக் கதை முடிகிறது. ஐரோப்பிய அதிகாரியின் மனதைவிட்டு ஆப்பிரிக்கா அகலவிலை.

ஒருவேளை அதிகாரி அவளைப் புரிந்துகொண்டு இருவருக்கும் பாலியல் உறவு நடந்திருந்தால், அவள் அடிமையுடன் கூடிப் பாலியல் உறவில் பெற்ற சுதந்திரம் போயிருக்கும். ஆனால் கதை அவ்வாறு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. குற்ற உணர்ச்சியோடே அவன் இருத்தல் என்பது ஒருவகை தண்டனை. ஏனென்றால் அவன் அதிகாரத்தால் ஆனவன். அவன் மனம் விடுதலைக்கு உரியது அல்ல. ஆப்பிரிக்கா விடுதலைக்கு உரியவர்களுக்கு விடுதலையையும் அதிகாரத்திற்குரியவர்களுக்கு குற்ற உணர்ச்சியாகிய உள்தண்டனையையும் (புற தண்டனை தோன்றி அழிந்துவிடும்) அளிக்கிறது. ஆப்பிரிக்காவை மாற்ற வந்தவர்களை ஆப்பிரிக்கா மாற்றியிருக்கிறது. காரணம் அது தொல்குடிகளின் நிலம். இங்கு விடுதலை தொல்மனமாகிய அகத்திலிருந்து உருவானதால் குற்ற உணர்ச்சியாகிய தண்டனையை அதிகாரத்தால் (புறம்) அழிக்க முடியவில்லை. புறமாகிய அதிகாரமோ விடுதலையாகிய அகத்தைப் புறமாக மட்டும் அணுகுகிறது. அதிகாரி விடுதலைக்காக எழுதுவது அகம் சார்ந்தது இல்லையா என்ற கேள்வி எழும். அது எழுதப்படாமல் இருக்கும்போதுதான் அகம். எழுதப்பட்டுவிட்டால்

அது புறம். அதிகாரம் அகமாக அணுகும் சில இடங்களும் (அதிகாரி பணியாள் சிறுவனை மகனாகப் பார்த்தல்) உண்டு. அவை விடுதலை மனம் தொல் மனமாக இருப்பதால் எளிதில் விலக்கப்பட்டு விடுகின்றன. விடுதலை தொல் மனத்தின் நீட்சியாதலால் பணியாள் சிறுவன் புறமாகிய அதிகாரத்தைத் தோற்றத்தின் வழி தன்வயப்படுத்தி அகத்திற்குள் வைத்து அணுகுகிறான். இவற்றிலிருந்து ஒரு முடிவுக்கு வரலாம். 'வெட்சிதானே குறிஞ்சியது புறனே' என்ற தொல்காப்பிய அகப்புற இணைவு தத்துவத்தின்படி அகத்துக்கு இணையானது புறம். அந்தவகையில் விடைகொடு ஆப்பிரிக்கா கதை, அகமாகிய விடுதலைக் கருத்தியலைப் புறமாகிய அதிகாரத்தைத் தன்வயப்படுத்தி தனக்கு இணையாக வைத்து உரையாடியிருக்கிறது. புறத்திற்கு ஏற்ப அகம் வளைந்து கொடுக்காமல் தனக்கு ஏற்ப புறத்தை வளைத்திருப்பது என்பது அதிகாரத்திற்கு எதிரான புதிய விடுதலைசார் உரையாடலைச் சாத்தியப்படுத்தி உள்ளது.

**முடிவாக**

கதையில் ஆப்பிரிக்க அடிமை தன்னளவிலான ஒரு பாத்திரமாக இடம்பெறவில்லை. அதிகாரியின் மனநிலைவழிப்பட்ட பாத்திரமாக இடம்பெறுகிறார். ஆக ஒடுக்கப்பட்ட பாத்திரம் இல்லாமலே ஒரு தலித்திய உரையாடலை எழுத முடியும் என்பதைச் சொல்கிற கதை இது. ஐரோப்பிய அதிகாரம் எழுத்தாகிய ஆண் வடிவிலும் ஆப்பிரிக்க சுதந்திரம் பேச்சாகிய பெண் வடிவிலும் முயங்கி உருப்பெற்ற கதை இது. நாகரிகமற்ற வாழ்வியலைத் தன்னகத்தே வைத்துக்கொண்டு மற்றமைகளுக்கு நாகரிகத்தைக் கற்றுக்கொடுக்க வந்தவர்களுக்கு நாகரிகம் என்பது யாருடைய வாழ்விலும் யாரும் குறுக்கீடு செய்யாமல் இருப்பதுதான் என்பது, கதையின் உள் ஓடும் அழகியல். நம் தமிழில் விடுதலையைக் கோரும் கதைகள் அதிகாரத்தையும் ஒடுக்குமுறையையும் முரணாக நிறுத்தி உரையாடும். அது சமதள முரண்சார் உரையாடல். இக்கதையோ வெளிமுரணை விலக்கி உள்முரணைக் கூர்மைப்படுத்துகிறது. கதை ஒடுக்கப்பட்டவர்களின் பார்வையில் இல்லாமல் அதிகாரத்தின் பார்வையில் ஒடுக்கப்பட்டவர்களின் எழுச்சியை இன்மையாக வைத்து அதிகாரத்தின் ஒடுங்குதலைச் சொல்கிறது. இவ்வாறு அதிகாரத்திற்கு எதிரான விடுதலையை மற்றொரு வகையில் அணுகுவது பின்காலனிய விடுதலைசார் எழுத்துமுறை எனலாம்.

**துணைநின்ற நூல்கள்**


- கூகி வா தியாங்கோ, கோகி. வா., ஜூலை 2025, **விடைகொடு ஆப்பிரிக்கா**, காலச்சுவடு, நாகர்கோவில்.
- கூகி வா தியாங்கோ, 2025, **அடையாள மீட்பு**, அ. மங்கை (மொ.ஆ.), எதிர் வெளியீடு, பொள்ளாச்சி.
- சுப்பிரமணியன், ச.வே.சு. (உ.ஆ.), 2003, **தொல்காப்பியம் தெளிவுரை**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
- தமிழவன், 2023, **நவமார்க்சிய வழியில் திராவிடத் தமிழ்ச் சிந்தனைகள்**, எதிர் வெளியீடு, பொள்ளாச்சி.